# குடியரசு நாள் விழா நிகழ்ச்சிகள் - 2026!







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.1.2026) குடியரசு நாள் விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு மலர்கொத்து வழங்கி வரவேற்றார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.



சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2026) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மை விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய பதக்கங்களையும், கோப்பைகளையும் பெற்றவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.













## குடியரசு நாள் விழா 2026 விருதுகள்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.1.2026) சென்னை, காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் வழங்கிய பதக்கங்கள் , விருதுகள் மற்றும் கோப்பைகளின் விவரங்கள்.

**வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கங்கள்**

- வி. சங்கர், தீயணைப்பு ஓட்டுநர்
- பி. சுரேஷ், தீயணைப்பு வீரர்
- எஸ். ரமேஷ் குமார், தீயணைப்பு வீரர்
- ஜெஸ்ஸி, (மறைவு) திரு. பீட்டர் ஜான்சன்

**கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது**

- எம். கலிமுல்லா, திருப்பூர் மாவட்டம்

**திரு. சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது**

- ஜி. வீரமணி, தஞ்சாவூர் மாவட்டம்

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

- பி. நடராஜன், காவல் ஆய்வாளர், விழுப்புரம் மண்டலம், மத்திய நுண்ணறிவு பிரிவு
- எம். சதியநந்தன், காவல் உதவி ஆய்வாளர், விழுப்புரம் மாவட்டம், ஆரோவில் காவல்நிலையம்
- எஸ். மணிகண்டன், காவல் உதவி ஆய்வாளர், கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் காவல் நிலையம்
- கே. நடராஜன், காவல் உதவி ஆய்வாளர், கடலூர் மாவட்டம், புத்தூர் காவல் நிலையம்
- வி.பி. கண்ணன், தலைமை காவலர், சேலம் மாவட்டம், மத்திய நுண்ணறிவு பிரிவு

**சிறந்த காவல் நிலையத்திற்கான கோப்பைகள்**

முதல் பரிசு – மதுரை மாநகரம் பி. பூமிநாதன், காவல் ஆய்வாளர்
இரண்டாம் பரிசு – திருப்பூர் நகரம், கே. பிரேமா, காவல் ஆய்வாளர்
மூன்றாம் பரிசு – கோயம்புத்தூர் மாவட்டம், பி. சின்ன காமனன், காவல் ஆய்வாளர்





குடியரசு தினத்தை முன்னிட்டு ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கெருகம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு ஊர் மக்களின் குறைகளை கேட்டறிந்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், அரசு அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியத்துக்கு உட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சி திருசூலம் ஊராட்சி பகுதிகளில் 77 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றன பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்எல்ஏ கிராம சபை கூட்டங்களில் கலந்து கொண்டு இதுவரை ஊராட்சிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்திராவிட மாடல் நல்லாட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மேலும் இந்த ஊராட்சிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து முடித்து தர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.